பெரியார் மாவட்டத்தில் திறந்தவெளி சிறைச்சாலை அமைக்கும் திட்டம்.

237 (*வினா 10622)—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டத்தில் திறந்தவெளி சிறைச் சாலை அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.
(ஆ) வினாவுக்கு இடமில்லை.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்தில் ஏதாவது ஒரு பகுதியிலாவது அல்லது ஒரு இடத்தி லாவது அமைக்கிற நோக்கம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் முத்துப்பட்டியிலும், நெல்லை மாவட்டத்தில் சிங்கப்பட்டியிலும், தென் ஆற்காடு மாவட்டத் தில் வெள்ளப்பாக்கத்திலும், செங்கை மாவட்டத்தில் வேங்கட மங்களத்திலும் இத்தகைய சிறைச்சாலைகள் அமைக்க அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, அதேபோல் பெரியார் மாவட்டத்திலே அமைத்து அங்கே குற்றம் செய்கிறவர்களுக்கு நல்ல தொழில்களை உருவாக்குவதற்கு அதற்காக நிலங்களை எடுத்து தொழில்களை உருவாக்கி குற்றத்தை மறக்கிற அளவிற்கு அரசு தொழில்களை உரு வாக்க முன்வருமா ?

மண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, குற்றவாளிகள் இதுபோன்ற திறந்த வெளி சிறைச்சாலைகளில் பயிற்சி பெறுகின்றபோது அல்லது இருக்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணு கிறமாதிரி அவர்கள் மனமாற்றம் பெறுகின்ற வாய்ப்பு உண்டு. ஆனால், தமிழகத்திலே துவக்கப்பட்ட மாவட்டங்களில் இறுதி யாக துவக்கப்பட்ட பெரியார் மாவட்டத்திற்கு முன்னுரிமை தந்து, இந்த திறந்தவெளி சிறைச்சாலையை ஆங்கு தற்போது அமைப்போமானால், ஏற்கனவே இருக்கின்ற பெரிய மாவட் டங்கள் எல்லாம் வருத்தப்படும் என்பதால், இதை படிப்படி யாக மேற்கொள்ளுகிறபோது, அந்த காலகட்டத்தில் இதைப் பற்றி அரசு ஆராயும்.

1984 மார்ச் 9]

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திறந்தவெளி சிறைச்சாலை அமைப்பது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீண்டகாலத்திற்கு முன்னாலே பிரிக்கப்பட்ட தர்மபுரி மாவட்டத்தில் இதற்கான இடங்கள் எல்லாம் பார்த்து, அதை அமைப்பதற்கு வேண்டிய வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, தர்மபுரி மாவட்டத்தில் திறந்தவெளி சிறைச்சாலை அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலும் திறந்தவெளி சிறைச்சாலை அமைக்கக்கூடிய அளவில் இடம் கிடைக்காது என்பதில் அரசுக்கு எவ்வித பயமும் இல்லை ; அச்சமும் இல்லை. ஆனால், படிப்படியாக இந்தத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. புதிய முறையில் தற்போது இந்தத் திட்டத்தைக் கொண்டுவருகிறபோது, நிதி ஆதாரங்களுக்கு உட்பட்டு, படிப்படியாக பல்வேறு பகுதிகளுக்கு நீட்டிப்பது குறித்து அரசு ஆய்ந்து முடிவெடுக்கும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் திறந்த வெளி சிறைச்சாலை தற்போது அமைப்பதற்கு அரசிடம் திட்டமில்லை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பெரியார் மாவட்டத்திலே இருக்கக் கூடிய கைதிகள் பெரிய அளவிலே கோவை சிறைச்சாலைக்குக் கொண்டு போகப் படுவதால், அங்கே சமாளிக்க முடியாத நிலையிருக்கிறது. ஒன்று, திறந்தவெளி சிறைச்சாலையைப் பெரியார் மாவட்டத்திலே ஏற்படுத்துங்கள் ; இல்லாவிட்டால், இந்த புதிய மாவட்டத்தில் ஒரு மத்திய சிறைச்சாலையை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் ஒரு நல்ல வினாவை எழுப்பியிருக்கிறார்கள். பெரியார் மாவட்டத்திற்கு தனியாக ஒரு சிறைச்சாலையை அமைப்பது குறித்து அரசு விரைவில் ஆய்ந்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திறந்த வெளி சிறைச்சாலையை அமைப்பதில் மாவட்டப் பிரச்சினையாகக் கருதாமல், கைதிகளின் மன உணர்வை மேன்மை படுத்துவதற்கு திறந்தவெளி சிறைச்சாலை அமைப்பது சிறந்ததாகும் என்று சொல்லப்படுவதாலும், இந்த திறந்த வெளி சிறைச்சாலை வைப்பதால் செலவும் குறைவாகும் என்பதாலும், திறந்த வெளி சிறைச்சாலை ஆரம்பிப்பதோடு, இதிலே எத்தனை சதமானம் கைதிகளை வைக்க முடியும் என்பதையும், இதை விரிவு படுத்துவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறந்தவெளி சிறைச்சாலையை மாவட்ட ரீதியில் அமைக்க வேண்டுமென்று எண்ணுவது கூடாது தான். அப்படி அரசு எண்ணவில்லை. உறுப்பினர்கள் அத்தகைய கேள்வி கேட்டதால், பதில் சொல்ல வேண்டியது என் கடமையாகப் போய் விட்டது. ஆனால், அரசினுடைய கொள்கையைப் பொறுத்த வரையில், கைதிகள் 3 ஆண்டுகளுக்கு சிறையில் இருக்கிறவர்கள், திருந்த வாய்ப்புப் பெற்றவர்கள் அல்லது திருந்த வேண்டிய சூழ்நிலையில் உள்ளவர்கள், திருந்துவதற்கான வாய்ப்பு உள்ளவர்கள் போன்றவர்களுக்கெல்லாம் இது போன்ற திறந்த வெளி சிறைச்சாலைகளை அமைத்து, அவர்களுக்கு ஆங்கு திருந்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித்தர வேண்டும். குற்றம் செய்தால் அவர்கள் தண்டனை பெற்று, சிறையில் இருந்து, பின்னர் வெளியே வந்த பிறகு, விடுதலை பெற்ற பிறகு, சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில், He is looked down by the society என்ற காரணத்தினால், அவர்களுக்கு சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் அடிப்படையில் அவர்களுக்கு வாய்ப்புத் தரவேண்டும் என்ற முறையில், தற்போது சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறபோது, திறந்த வெளி சிறைச்சாலைகள் அமைப்பது உகந்தது என்று கருதி, அந்த அடிப்படையில் அதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறோம்.

வேதாரண்யம் உப்பளத்தில் உப்பு உற்பத்தியை அதிகரிக்கும் திட்டம்.

238 (*வினா எண் 19566) திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் உப்பளத்தில் உப்பு உற்பத்தியை அதிகரிக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு உப்பு நிறுவனம் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை தாலுக்காவிலுள்ள வேதாரண்யம் சதுப்பு நிலப் பகுதியின் மேற்கு கோடியிலுள்ள மரவக்காடு - வடக்காடு கிராமங்களில் 2875 ஏக்கர் நிலப் பரப்பை உப்பு உற்பத்திக்காக மேம்படுத்தி வருகிறது. இந்த உப்புத் தொழிற்சாலை 1982ஆம் ஆண்டு மேம்பாட்டு வேலைகளுடன், உப்பு உற்பத்தியையும் ஆரம்பித்துள்ளது. 1983 ஆம் ஆண்டில் இத் தொழிற்சாலையில் சுமார் 5226 டன்கள் உப்பு உற்பத்தியையும் ஆரம்பித்துள்ளது. உப்பு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது.

TRUTH ALONE TRIUMPHS